## 26. ஏக்கர் வரி அறவிடல்– அண்ணளவான வரைபடம்

டிஜிட்டல்மயப்படுத்தப்பட்ட தரவுகளைப் பயன்படுத்துதல்

இலத்திரனியல் செய்தி ∴ கொடுக்கல்வாங்கல் (SMS / WhatsApp / e-mail)

சுரிபார்த்தல் அறிவித்தலை அச்சிடல்

பொறுப்பு : செயலாளர்

↓

ஏக்கர் வரி அட்டவணையை பொதுமக்களது பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதாகவும் சரிபார்த்தலுக்கு எதிர்ப்புகளை முன்வைக்க முடியும் என வர்த்தமானியிலும் பத்திரிகையிலும் அறிவித்தல்.

பொறுப்பு : தலைவர்

↓

ஏக்கர் வரி அட்டவணையை பொதுமக்களது பார்வைக்கு வைத்தல் மற்றும் சரிபார்த்தல் எதிர்ப்பு அட்டவணையை பொதுமக்களுக்குத் திறந்தவகையில் வைத்தல்.

பொறுப்பு : செயலாளர்

↓

சுரிபார்த்தல் அறிவித்தலை சொத்தின் உரிமையாளருக்கு அல்லது வசிப்பவருக்கு ஒப்படைத்தல்.

பொறுப்பு : செயலாளர்

↓

சுரிபார்த்தல் அறிவித்தலை சமர்ப்பித்தல் அல்லது சொத்து தொடர்பில் விபரங்களைக் காட்டி ஏக்கர் வரியை கொடுப்பனவு செய்வதற்கு முன்வருதல்.

பொறுப்பு : சொத்தின் உரிமையாளர் மற்றும் வசிப்பவர்

↓

ஊரிய சொத்துக்களை அடையாளங்கண்டு கொடுப்பனவு செய்யவேண்டியுள்ள ஏக்கர் வரியின் அளவை அறிவித்தல்.

பொறுப்பு : முன் அலுவலக உத்தியோகத்தர்

↓

மொத்த தொகையை கொடுப்பனவு செய்ய விருப்பமா?

ஆம் →

வழங்கப்படக்கூடிய கழிவுகளை கருத்திற்கொண்டு வரியை அறவிட்டு பற்றுச்சீட்டை வழங்குதல்.

பொறுப்பு : முன் அலுவலக உத்தியோகத்தர்

இல்லை →

கொடுப்பனவு செய்யப்படுகின்ற தொகைக்கு பொருத்தமான கழிவுகள் உரித்தெனின், அதனையும் கவனத்திற் கொண்டு வரித் தொகையை அறவிட்டு பற்றுச்சீட்டை வழங்குதல்.

பொறுப்பு : முன் அலுவலக உத்தியோகத்தர்

↓

ஏக்கர் வரி பதிவேட்டை இற்றைவரைப்படுத்துதல்

பொறுப்பு : முன் அலுவலக உத்தியோகத்தர்

செயற்றிறன் குறிகாட்டி



## 26. ஏக்கர் வரி அறவிடல்

### 1. அறிமுகம்

வரியொன்றை விதிப்பதற்கு அரசியலமைப்புச் சட்டத்தின் 148ஆம் யாப்பின் ஊடாக பாராளுமன்றத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரம், சட்டம் ஊடாக பிற ஏதேனும் நிறுவனத்திற்கு கையளிப்பதற்கு பாராளுமன்றத்திற்கு கிடைத்துள்ள அதிகாரத்தின் கீழ், தினந்தோறும் அல்லது நிலையாக மேற்கொள்ளப்படுகின்ற விவசாயத்திற்கு உட்பட்ட காணிகளுக்கு குறித்துரைக்கப்பட்டு அறவிடப்படுகின்ற வரியாகும். பிரதேச சபைகளுக்கு மாத்திரமே ஏக்கர் வரி அறவிடுவதற்கு அதிகாரமுண்டு. இது ஏக்கர் வரி என அழைக்கப்படுகின்றது.

### 2. சட்ட அதிகாரம்

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134 (3) பிரிவு, 141ஆம், 158ஆம், 160ஆம் பந்தி மற்றும் 161ஆம் பந்தி

(ஆ) இங்கு இணைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதேச சபைகளுக்குரியதாக வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல்களின் கட்டளைகள்

### 3. தகைமைகள்

(அ) பிரதேச சபையின் எல்லையினுள் அமைந்துள்ள நிலையான அல்லது தினந்தோறும் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ள காணிகள்.

(ஆ) 5 ஹெக்டேயரைவிட அதிகளவான காணியைக் கொண்டிருத்தல்.

(இ) இந்த உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கமைய,விசேட ஒரு பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பிரதேச சபைகளுக்கு மட்டும் 1 ஹெக்டெயாருக்கு கூடிய அல்லது 5 ஹெக்டேயரைவிட குறைவான காணிகளுக்கு வரி அறிவிடுவதற்கு அதிகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது.

குறிப்பு- ஏக்கர் வரி தவணையாகவோ அல்லது முழு வருடத்திற்கும் செலுத்த முடியும்.

### 4. கட்டணங்கள்

குாணியின் அளவைப் பொருத்து இந்த வரி அறவிடலின் விகிதாசாரம் மாறுபடும். ஆதனடிப்படையில் ஏக்கர் வரிக்குரிய காணியின் அளவு,

(அ) ஐந்து ஹெக்டெயார் அல்லது அதற்கு மேற்படுகின்ற சந்தர்ப்பத்தில், அந்தக் காணியின் ஒவ்வொரு ஹெக்டெயார் மீதும் ஆகக்கூடியது ரூ.10.00 தொகையும்,

(ஆ) ஒரு ஹெக்டெயாருக்குக் குறையாத எனினும் ஐந்து ஹெக்டெயார்களுக்கு குறைவான சந்தர்ப்பத்தில், அந்தக் காணியின் ஒவ்வொரு ஹெக்டெயாருக்கும் ஆகக்கூடியது ரூ.50.00 வீதமான தொகையும்,

பிரதேச சபையினால் விதிக்கப்படுகின்ற விதத்தில் அறவிடப்படுகின்ற தொகையாக கருதப்படல் வேண்டும்.

**குறிப்பு:** 1. மேலே (ஆ) பந்தியின் கீழ் காட்டப்பட்ட ஐந்து ஹெக்டெயாருக்கும் குறைந்த காணிக்கு ஏக்கர் வரியை விதித்து அறவிடுவதற்கு ஏதேனும் பிரதேச சபைக்கு அதிகாரம் அளிக்கப்படுவது, அந்தப் பிரதேச சபை உரித்துடைய பிரதேசமாக அமைச்சரினால் வர்த்தமானியில் விதிக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் மட்டுமே. (இவ்வாறு விசேட பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேச சபை தொடர்பான பட்டியலொன்று இங்கு உப அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளது)

2. பிரதேச சபையினால் விதிக்கப்பட்டுள்ள ஏக்கர் வரியானது, காலாண்டு ரீதியாக அல்லது ஒரு வருடத்திற்கான வரியை ஒரே தடவையில் செலுத்தும்போது கழிவொன்றைப் பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

(அ) வருடத்திற்கான ஏக்கர் வரியை, உரிய வருடத்தின் ஜனவரி மாதத்தில் செலுத்தும் சந்தர்ப்பத்தில், பத்து வீத (10%) கழிவும்;

(ஆ) காலாண்டிற்குரிய ஏக்கர் வரி, உரிய காலாண்டின் முதலாவது மாதத்தில் செலுத்தப்படும் சந்தர்ப்பத்தில், ஐந்து வீத (5மூ) கழிவும்;

என்ற ரீதியில் அதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 5. சமர்ப்பிக்கவேண்டிய ஆவணங்கள்

(அ) பிரதேச சபையினால் வழங்கப்பட்ட சரிபார்த்தல் அறிவித்தல்.

(ஆ) சரிபார்த்தல் அறிவித்தல் இல்லாத ஏதேனும் சந்தர்ப்பத்தில், உரிய காணியின் அமைவிடத்தை (வீதி மற்றும் விலாசம்) குறிப்பிட்டு இந்த தகவல்களை அறிந்து கொள்வதற்கு முன் அலுவலக உத்தியோகத்தருக்கு வசதியாக அமையும்.

## 6. நடைமுறைகள்

| நடைமுறை | கால எல்லை | அதிகாரம் |
|---|---|---|
| சரிபார்க்கும் அறிவித்தலினை அச்சிடல் | ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் 31 ற்கு முன்னர் | செயலாளர் |
| ஏக்கர் வரி அட்டவணை காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளதாகவும் சரிபார்த்தல் தொடர்பில் எதிர்ப்புகளை சமர்ப்பிக்க முடியும் எனவும் வர்த்தமானியிலும் பத்திரிகைகளிலும் விளம்பரப்படுத்துதல். | ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் 31 ற்கு முன்னர் | தலைவர் |
| ஏக்கர் வரி அட்டவணையை பொதுமக்களது பார்வைக்கு வைத்தல் மற்றும சரிபார்த்தல் தொடர்பிலான எதிர்ப்பு அட்டவணையை பொதுமக்களது பார்வைக்கு வைத்தல். | ஒவ்வொரு வருடமும் நவம்பர் 01 தொடக்கம் ஜனவரி 31 வரை | செயலாளர் |
| சுரிபார்த்தல் அறிவித்தலை சொத்து உரிமையாளருக்கு அல்லது வசிப்பவருக்கு ஒப்படைத்தல். | ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் 31 ற்கு முன்னர் | செயலாளர் |
| சுரிபார்த்தல் அறிவித்தலை சமர்ப்பித்து அல்லது சொத்து தொடர்பான விபரங்களை வழங்கி ஏக்கர் வரியை செலுத்துவதற்கு முன்வருதல். | | சொத்து உரிமையாளர் அல்லது வசிப்பவர் |
| உரிய சொத்துக்களை அடையாளங்கண்டு கொடுப்பனவு செய்வதற்குள்ள ஏக்கர் வரியின் அளவை அறிவித்தல். | கொடுப்பனவு செய்ய சமர்ப்பித்த சந்தர்ப்பத்தில் | முன் அலுவலக அதிகாரி |
| கொடுப்பனவு செய்வதற்கு இணங்கிய தொகைக்கு சமமான மட்டத்தை | பணம் பெற்றுக் கொண்ட சந்தர்ப்பத்தில் | முன் அலுவலக அதிகாரி |

| நடைமுறை | கால எல்லை | அதிகாரம் |
|---|---|---|
| கருத்திற் கொண்டு உரிய வரித் தொகையை அறவிட்டு பற்றுச்சீட்டை வழங்குதல். | | |
| ஏக்கர் வரி அட்டவணையை இற்றைவரைப்படுத்துதல். | 1. கணனி மென்பொருளில் அதே சந்தர்ப்பத்தில்<br>2. அவ்வாறில்லாது விடின் பணம் செலுத்திய திகதி தொடக்கம் ஒரு வாரத்திற்குள் | 1. முன் அலுவலக உத்தியோகத்தர்<br>2. விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் |

குறிப்பு: 1. காணியின் அளவு தொடர்பில் எதிர்ப்பு முன்வைக்கப்பட்டிருந்தாலும், வருடத்திற்குரிய ஏக்கர் வரியை கொடுப்பனவு செய்வதற்கு காணியின் உரிமையாளர் அல்லது வசிப்பவர் கட்டுப்பட்டுள்ளார்.

**7. ஏக்கர் வரி கொடுப்பனவை செலுத்தத் தவறுவதின் விளைவுகள்**

(அ) தினந்தோறும் அல்லது நிலையாக மேற்கொள்ளப்படுகின்ற விவசாயத்திற்கு உட்பட்ட காணிகளுக்கு பிரதேச சபையினால் விதிக்கப்படுகின்ற ஏக்கர் வரி, அந்த நிறுவனத்தினால் விதிக்கப்படுகின்ற காலப்பகுதியில் அந்த பிரதேச சபைக்கு கொடுப்பனவு செய்வதற்கு அந்தக் காணியின் உரிமையாளர் அல்லது வசிப்பவர் உட்பட்டுள்ளார். ஊரிய காலப்பகுதியில் அந்த ஏக்கர் வரியை கொடுப்பனவு செய்வதற்கு எவரேனும் ஒருவர் தவறினால், அந்த நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு சபையின் உரிமையாளர் அல்லது எவரேனும் வரி அறவிடுபவரது பெயருக்கு பிடியாணையொன்றை வழங்குவதற்கு பிரதேச சபைத் தலைவருக்கு சட்டரீதியான அதிகாரம் உண்டு.

(ஆ) செயலாளரினால் அத்தகைய அனுமதிப்பத்திரமொன்றை வழங்கியதன் பின்னர், அந்த அனுமதிப்பத்திரத்தைப் பெற்றவரால், உரிய சொத்துக்கள்மீது இருக்கின்ற எவரேனும் ஒரு நபருக்குரிய அனைத்து அசையும் சொத்துக்களை தடை செய்து விற்று அறவிடவேண்டிய தொகையை அறவிட்டு பிரதேச சபை நிதியத்திற்கு வைப்புச் செய்தல் சட்டரீதியானதாகும்.

(இ) இவ்வாறு ஏதேனும் அசையும் சொத்துக்களை தடை செய்வதற்கு பிடியாணையை வழங்கும் கட்டணமாக அறவிடப்படவேண்டிய தொகையில் 10% தொகையை அறவிடுவதற்கு அதிகாரமுண்டு.

(ஈ) அவ்வாறே அசையும் சொத்துக்களை தடை செய்வதற்கான கட்டணமாக அறவிடப்படவேண்டிய தொகையில் 10% மேலதிக கட்டணத்திற்கும் ஏக்கர் வரியை கொடுப்பனவு செய்வதற்கும் உரிய நபர் கட்டுப்பட்டுள்ளார்.

(உ) இன்னமும் அவ்வாறு, தடை செய்வதற்கு எடுக்கக்கூடிய அசையும் சொத்துக்கள் எவையேனும் இல்லாத சந்தர்ப்பத்தில் உரிய அசையாச் சொத்துக்களை தடைசெய்து விற்பதற்கும் சட்டரீதியான அதிகாரம் உண்டு.

**அமைச்சரினால் வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள விதிமுறைகளின் அடிப்படையில் ஐந்து ஹெக்டெயாருக்குக் குறைந்த காணிகளில் ஏக்கர் வரியை அறவிடுவதற்கு அதிகாரத்தினைக் கொண்டுள்ள பிரதேச சபைகளின் பட்டியல்.**

**1. 1989. 02. 03 ஆந் திகதிய IV (ஆ) பகுதியானது வர்த்மானி அறிவித்தலின் 238ஆம் பக்கத்தில் அமைந்துள்ளது.**

(அ) கம்பஹா மாவட்டம் :

(01) மஹர பிரதேச சபை பிரதேசம்
(02) மினுவங்கொட பிரதேச சபை பிரதேசம்
(03) அத்தனகல்ல பிரதேச சபை பிரதேசம்
(04) தொம்பே பிரதேச சபை பிரதேசம்
(05) மீரிகம பிரதேச சபை பிரதேசம்
(06) கடான பிரதேச சபை பிரதேசம்
(07) கம்பஹா பிரதேச சபை பிரதேசம்
(08) திவுலபிட்டிய பிரதேச சபை பிரதேசம்

(ஆ) கண்டி மாவட்டம் :

(01) பாததும்பர பிரதேச சபை பிரதேசம்
(02) யட்டிநுவர பிரதேச சபை பிரதேசம்
(03) உடபலாத பிரதேச சபை பிரதேசம்
(04) ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை பிரதேசம்
(05) பன்வில பிரதேச சபை பிரதேசம்
(06) அக்குரண பிரதேச சபை பிரதேசம்
(07) மெததும்பர பிரதேச சபை பிரதேசம்
(08) பஸ்பாகே கோரளை பிரதேச சபை பிரதேசம்
(09) குண்டசாலை பிரதேச சபை பிரதேசம்
(10) கண்டி பட்டினமும் சூழலும் மற்றும் கங்கவட கோரளை பிரதேச சபை பிரதேசம்
(11) கங்க இஹல கோரளை பிரதேச சபை பிரதேசம்
(12) பாத்தஹேவாஹெட்ட பிரதேச சபை பிரதேசம்
(13) உடதும்பர பிரதேச சபை பிரதேசம்
(14) உடுநுவர பிரதேச சபை பிரதேசம்
(15) பூஜாபிட்டிய பிரதேச சபை பிரதேசம்
(16) தும்பனே பிரதேச சபை பிரதேசம்

(இ) காலி மாவட்டம் :

(01) ஹபராதுவ பிரதேச சபை பிரதேசம்
(02) நாகொடை பிரதேச சபை பிரதேசம்
(03) அம்பலாங்கொடை பிரதேச சபை பிரதேசம்
(04) போப்பே போத்தல பிரதேச சபை பிரதேசம்
(05) பெந்தோட்டை பிரதேச சபை பிரதேசம்
(06) நியாகம பிரதேச சபை பிரதேசம்
(07) அக்மீமன பிரதேச சபை பிரதேசம்
(08) எல்பிட்டிய பிரதேச சபை பிரதேசம்
(09) கரந்தெனிய பிரதேச சபை பிரதேசம்

குறிப்பு: மேலே ஹபராதுவ பிரதேச சபை பிரதேசமானது, ஹபராதுவை மற்றும் இமதுவ என இரண்டு பிரதேச சபைகளாகவும், கரந்தெனிய பிரதேச சபை பிரதேசமானது, கரந்தெனிய மற்றும் வெலிவிட்டிய – திவிதுர என இரண்டு பிரதேச சபைகளாகவும் மறுசீரமைக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் இந்த அனைத்து பிரதேச சபை பிரதேசங்களிலும் இந்த விதிமுறைகள் பொருத்தமுடையதாகின்றன.

(ஈ) அம்பாந்தோட்டை மாவட்டம்:

(01) பெலியத்த பிரதேச சபை பிரதேசம்
(02) தங்காலை பிரதேச சபை பிரதேசம்

(03) அங்குணகொலபெலஸ்ஸ பிரதேச சபை பிரதேசம் (04) வீரகெட்டிய பிரதேச சபை பிரதேசம்

(உ) இரத்தினபுரி:

(01) அட்டகலன்பன்ன பிரதேச சபை பிரதேசம் (02) அயகம பிரதேச சபை பிரதேசம்

(03) இம்புல்பே பிரதேச சபை பிரதேசம் (04) குருவிட்ட பிரதேச சபை பிரதேசம்

(05) இரத்தினபுரி பிரதேச சபை பிரதேசம் (06) வெலிகேபொல பிரதேச சபை பிரதேசம்

(07) பலாங்கொடை பிரதேச சபை பிரதேசம் (08) எஹெலியகொட பிரதேச சபை பிரதேசம்

(09) கொலன்ன பிரதேச சபை பிரதேசம் (10) கலவான பிரதேச சபை பிரதேசம்

(11) நிவித்திகல பிரதேச சபை பிரதேசம் (12) பெல்மடுல்லை பிரதேச சபை பிரதேசம்

குறிப்பு: மேலே அடகலன்பென்ன பிரதேச சபை பிரதேசமானது, கொடகவெல மற்றும் கஹவத்தை என இரண்டு பிரதேச சபைகளாக மறுசீரமைக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் இந்த அனைத்து பிரதேச சபை பிரதேசங்களிலும் இந்த விதிமுறைகள் பொருத்தமுடையதாகின்றன.

**2. 1989. 03. 10 ஆந் திகதிய IV (ஆ) பகுதி வர்த்தமானி அறிவித்தலின் 478ஆம் பக்கம்.**

(அ) கோகலை மாவட்டம்

(01) இறம்புக்கணை பிரதேச சபை பிரதேசம் (02) அரணாயக்க பிரதேச சபை பிரதேசம்

(03) யட்டியந்தோட்டை பிரதேச சபை பிரதேசம் (04) வரகாபொல பிரதேச சபை பிரதேசம்

(05) மாவனல்லை பிரதேச சபை பிரதேசம் (06) ருவன்வெல்லை பிரதேச சபை பிரதேசம்

(07) கலிகமுவை பிரதேச சபை பிரதேசம் (08) தெரணியகல பிரதேச சபை பிரதேசம்

(09) தெஹிஓவிட்ட பிரதேச சபை பிரதேசம் (10) கேகாலை பிரதேச சபை பிரதேசம்

(ஆ) குருணாகல் மாவட்டம்:

(01) பன்னல பிரதேச சபை பிரதேசம் (02) பண்டுவஸ்நுவர பிரதேச சபை பிரதேசம்

(03) வாரியபொல பிரதேச சபை பிரதேசம் (04) குருணாகல் பிரதேச சபை பிரதேசம்

(05) பிங்கிரிய பிரதேச சபை பிரதேசம் (06) நிக்கவெரட்டிய பிரதேச சபை பிரதேசம்

(07) பொல்கஹவெல பிரதேச சபை பிரதேசம் (08) குளியாபிட்டிய பிரதேச சபை பிரதேசம்

(09) பொல்பித்திகம பிரதேச சபை பிரதேசம் (10) ரிதீகம பிரதேச சபை பிரதேசம்

(11) கொபெய்கனே பிரதேச சபை பிரதேசம் (12) மாவத்தகம பிரதேச சபை பிரதேசம்

(13) இப்பாகமுவ பிரதேச சபை பிரதேசம் (14) அலவ்வ பிரதேச சபை பிரதேசம்

(15) மஹவ பிரதேச சபை பிரதேசம்

குறிப்பு: மேலே பிங்கிரிய பிரதேச சபை பிரதேசமானது, பிங்கிரிய மற்றும் உடுபத்தாவ எனவும் அலவ்வ பிரதேச சபை பிரதேசமானது அலவ்வ மற்றும் நாரம்மல என இரண்டு பிரதேச சபைகளாகவும் மறுசீரமைக்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் இந்த அனைத்து பிரதேச சபை பிரதேசங்களிலும் இந்த விதிமுறைகள் பொருத்தமுடையதாகின்றன.

(இ) நுவரேலியா மாவட்டம்:

(01) ஹங்குரன்கெத்த பிரதேச சபை பிரதேசம்

(02) அம்பகமுவ பிரதேச சபை பிரதேசம்

குறிப்பு: மேலே அம்பகமுவ பிரதேச சபை பிரதேசமானது, அம்பகமுவை, மஸ்கெலியா மற்றும் நோர்வுட் என மூன்று பிரதேச சபைகளாக மறுசீரமைக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் இந்த அனைத்து பிரதேச சபை பிரதேசங்களிலும் இந்த விதிமுறைகள் பொருத்தமுடையதாகின்றன.

(ஈ) புத்தளம் மாவட்டம்:

(01) நவகத்தேகம பிரதேச சபை பிரதேசம்

(02) கல்பிட்டிய பிரதேச சபை பிரதேசம்

(03) வண்ணாத்திவில்லு பிரதேச சபை பிரதேசம்

(04) ஆணைமடு பிரதேச சபை பிரதேசம்

(05) புத்தளம் பிரதேச சபை பிரதேசம்

(06) சிலாபம் பிரதேச சபை பிரதேசம்

(07) ஆரச்சிகட்டுவ பிரதேச சபை பிரதேசம்

(08) நாத்தாண்டி பிரதேச சபை பிரதேசம்

(09) வென்னப்புவ பிரதேச சபை பிரதேசம்

(ஒ) மாத்தறை மாவட்டம்:

(01) கம்புறுபிட்டிய பிரதேச சபை பிரதேசம்

(02) முலட்டியன பிரதேச சபை பிரதேசம்

(03) ஹக்மண பிரதேச சபை பிரதேசம்

(04) மாத்தறை பிரதேச சபை பிரதேசம்

(05) அக்குரஸ்ஸ பிரதேச சபை பிரதேசம்

(06) பஸ்கொட பிரதேச சபை பிரதேசம்

(07) திக்வெல்லை பிரதேச சபை பிரதேசம்

(08) கொட்டபொல பிரதேச சபை பிரதேசம்

(09) தெவிநுவர பிரதேச சபை பிரதேசம்

(10) திஹகொட பிரதேச சபை பிரதேசம்

(11) வெலிகம பிரதேச சபை பிரதேசம்

குறிப்பு: மேலே கம்புறுபிட்டிய பிரதேச சபை பிரதேசமானது, கம்புறுபிட்டிய மற்றும் கிரிந்த – புஹுூல்வெல்ல என இரண்டு பிரதேச சபைகளாகவும், அக்குரெஸ்ஸ பிரதேச சபை பிரதேசமானது அக்குரெஸ்ஸ மற்றும் அத்துரலிய என இரண்டு பிரதேச சபைகளாகவும் மறுசீரமைக்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் இந்த அனைத்து பிரதேச சபை பிரதேசங்களிலும் இந்த விதிமுறைகள் பொருத்தமுடையதாகின்றன.

**3. 1989. 04. 28 ஆந் திகதிய IV (ஆ) பகுதி வர்த்தமானியின் 652ஆம் பக்கம்.**

**(அ) பதுளை மாவட்டம்:**

(01) பதுளை பிரதேச சபை பிரதேசம்

(02) ஊவா பரணகம பிரதேச சபை பிரதேசம்

(03) ரிதீமாலியத்த பிரதேச சபை பிரதேசம்

(04) ஆலிஎல பிரதேச சபை பிரதேசம்

(05) வெலிமடை பிரதேச சபை பிரதேசம்

(06) மீகஹகிவுல பிரதேச சபை பிரதேசம்

(07) பசறை பிரதேச சபை பிரதேசம்

(08) எல்ல பிரதேச சபை பிரதேசம்

(09) பண்டாரவளை பிரதேச சபை பிரதேசம்

(10) கந்தகெட்டிய பிரதேச சபை பிரதேசம்

(11) பதுளை பிரதேச சபை பிரதேசம்